12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியது</u>

# <u>முப்பெருவிழா முயற்சிப் பணிக் கருத்தோவியங்கள்</u>

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணைடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 **ஆவணி** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

# <u>உள்ளுறை</u>

1. "13.7.1983இல் மதுரை அருள்தாசபுரத்தில் வாசித்த கொள்கை விளக்கம்" - வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகன் அவர்கள் தயாரித்த உரையின் நகல்.

2. "செயல் ஊக்க ஆக்க அழைப்பு" - குருதேவர் அவர்கள் வீரமாகாளி சன்னிதானம் திரு நெ.சேவுகன் அவர்களுக்கு விடுத்த அஞ்சலின் நகல்.

3. "முப்பெருவிழா பாராட்டுக்குப் பதில் மடல்" - குருதேவர் அவர்கள் விரகாலூர் சித்தரடியான் திரு நாகராசு அவர்களுக்கு எழுதிய அஞ்சலின் நகல்.

4. "இரண்டாவது முப்பெருவிழா முயற்சிப் பணிக் கருத்தோவியங்கள்" - குருதேவர் அவர்கள் மதுரைச் சித்தரடியான் திரு மேலமடைப் பாண்டியன் அவர்களுக்கு எழுதிய கட்டுரை அஞ்சலின் நகல்.

---

"... தமிழ்மொழிக்கு இறை அணுக்களே ஈர்க்கவும்; ஒன்று திரட்டவும்; ஒற்றுமைப் படுத்தவும்; ஆணையிட்டுச் செயல்படுத்தவும் பேராற்றல் இருக்கின்றது. அதனால்தான், '<u>தமிழ்மொழியே கடவுள்</u>', '<u>தமிழ்மொழியைப் பேசுவதே இறை வழிபாடு</u>', '<u>தமிழர் நினைவே மறை</u>', '<u>தமிழர் வாழ்வே முறை</u>', '<u>தமிழே அமிழ்து</u>', '<u>தமிழே இனிமை, இளமை, கனிவு, சுவை, நிலைபேறு, தவம், சித்தி</u>', ..... என்றெல்லாம் பதினெண்சித்தர்களின் நூல்களில் பாராட்டப்படுகின்றது. ..."

**குருதேவர் அவர்கள் எழுதியருளிய கட்டுரைத் திரட்டிலிருந்து எடுக்கப்பட்ட சில வரிகள்.**

# 13.7.1983இல் அருள்தாசபுரத்தில் வாசித்த கொள்கை விளக்கம்

அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் பொருளாகவும், அருளாகவும் இருந்தவன் ஆலவாய் அழகன், அவிர்சடைக் கடவுள், அரவம் சூடியவன், ஆறணிந்தவன், அழல்நிறத்தவன், ஆலமர்கடவுள், சொக்கன். அவனது தலைநகரான இந்தப் பெருமைக்குரிய மதுரை மாநகர்ப் பெருமக்களே! உங்களுக்குப் பணிந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொருளுலக இருள்கள், இன்னல்கள், சுரண்டல்கள், கொள்ளைகள், சர்வாதிகாரங்கள், மடமைகள், ஏக்கங்கள், தேக்கங்கள், தூக்கங்கள், ஏமாற்றுக்கள், பற்றுக் குறைகள், வறுமைகள், தவறுகள் ... அனைத்தும் அருளுலகச் சாதனைகளால்தான் அகற்ற முடியும். அனைத்தையும் அன்பு வழியில், அற வழியில், அமைதி வழியில், சமாதான வழியில், மென்மை வழியில் இறையருளால்தான் சாதிக்க முடியும்.... என்பதற்காகவே இரவுபகலாக நூற்றுக்கணக்கில் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்கள்.

மக்களின் வாழ்வியல் கோளாறுகளான விதி, ஊழ்வினை, சாபம், கண்ணேறு, பேய்கள், பிசாசுகள், ஆவிகள், தெய்வக் கோளாறுகள், நாள் கோள் நட்சத்திரப் பாதிப்புகள்...; மந்திரவாதிகளின் தாக்குதல்களான ஏவல், பில்லி, சூனியம், வைப்பு, கழிப்பு, காற்று, மருந்து, மந்தரம், மாந்தரம், மாந்தரீகம் ... முதலிய பாதிப்புக்களிலிருந்து

விடுவிப்பதற்காக ஆங்காங்கே அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ஓமங்கள், ஓகங்கள், யாகங்கள், யக்ஞங்கள், வேள்விகள், தவங்கள் ... நிகழ்த்தப்பட்டு; மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், அருள்வாக்குகள், அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாசகங்கள், திருவாக்குகள், திருவாசகங்கள், குருவாக்குகள், குருவாசகங்கள், கருவாக்குகள், கருவாசகங்கள் ... முதலியன ஓதப்பட்டு மக்களுக்கு அனுபவப் பொருளாக அருளை வழங்கி நலம் விளைவிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டே வருகிறது.

அந்த அடிப்படையில் இங்கு அருள்தாசபுரத்தில் உள்ள அருள்மிகு ஐயனர் திருக்கோயில் அருகில் அமைக்கப்பட்டுள்ள யாககுண்டத்தில் கடந்த ஓராண்டுக் காலமாக யாகம் வளர்க்கப்பட்டு மக்களுக்கு அருள்நலம் வழங்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்று 48வது யாகத்தை மண்டல யாக நிறைவு விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த யாகத்தில் ஒவ்வொரு தனிமனிதரின் பிறப்பியல், வரியியல், பெயரியல், எண்ணியல், அங்கவியல், மனையியல் ... முதலியவைகளைச் சித்தர்களின் முறையில் கணித்து அதற்குரிய பரிகாரங்கள் ஒன்பது வாரங்கள், பன்னிரண்டு வாரங்கள், பதினெட்டு வாரங்கள் ... என்று **இலவசமாகச் செய்யப்பட்டு நலம் வழங்கப் படுவதுடன்; ஒவ்வொருவரையும் தன்னை உணர்ந்து கடவுள்நிலைக்கே உயர்த்திக் கொள்ளக் கூடிய வழிவகைகளும், பூசாமுறைகளும் கற்றுத் தரப்படுகின்றன**.

இவ்வாறு சித்தர்களின் அருட்கொடைகளான மந்திரங்கள், எந்திறங்கள், பூசா விதிகள், நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், தவ வழிகள், வேள்வி வழிகள், ஞான வழிகள், சித்தி வழிகள், கடவுட் கலைகள், தெய்வீகக் கலைகள், பேய்க் கலைகள், நோய்க்

கலைகள், தேய் கலைகள், அறுபத்து நான்கு ஆய கலைகள், நாற்பத்தெட்டு அருட் கலைகள், தொண்ணூற்றுறு தோத்திற சாத்திறங்கள் ஆகியவை-யெல்லாம் விரும்பியவர்களுக்கு முறைப்படி குருகுலத்தில் கற்றுத் தரப்படுகின்றது.

சித்தர்களின் அருட்கொடைகளையெல்லாம் வழங்கக் கூடிய பேரருள் வள்ளலாக, பதினெண்சித்தர் பீடாதிபதி, இராசிவட்ட நிறைவுடையார், நல்லிலக்கண மார்புடையார், ஞாலகுரு, ஞானகுரு, அரசயோகி, ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இன்றைய குருமகா சன்னிதானம் சித்தர் கருவூுரர், குருதேவர் அவர்கள் தமது பயிற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும், முயற்சிக்குரிய பதினெட்டாண்டுகளையும் பயன்படுத்தியே உலகெங்குமுள்ள எல்லா அருட்கலை கழகங்களையும் தொடர்பு படுத்தி ஓர் அரிய இணைப்புச் செயல்நிலையை உருவாக்கியிருக்கிறார்.

எனவே, இவர், இவரது முன்னோர் **தாய்வழித் தாத்தா கண்டப்பக் கோட்டையார் என்றும், சித்தர் ஏளனம்பட்டியார்** என்றும் அழைக்கப்படும் உ.இராமசாமிப் பிள்ளை கி.பி. 1772இல் **உலகம் முழுதும் உள்ள மதவாதிகளை மறுமலர்ச்சி பெறச் செய்வதற்காக** உயிரணுவைக் குறிக்கும் சொல்லான **‘இந்து’** என்ற சொல்லைப் பயன்படுத்தி உருவாக்கிய ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ என்ற அமைப்பை; இன்றைய உலகியலுக்கும் அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் விருப்பத்திற்கும் ஏற்ப அரசியல் சட்டதிட்டக் கட்டுப்பாட்டு நிர்ணயங்களுக்கு உட்பட்ட ஓர் அமைப்பாகப் பதிவு செய்துள்ளார்.

இந்தச் சங்கம் பல கழகங்களின் சங்கமமாகும். இது சமய சமுதாயப் பண்பாட்டுக் காப்பகமாக, கருவூலமாக, வளர்ச்சிப் பண்ணையாக இருக்கும். இந்த ‘இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின்’

மூலமாக **<u>'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுக் கழகங்களையும்', 'உலகமத ஒற்றுமைக் கழகங்களையும்', 'உலக அருளாளர் கழகங்களையும்', 'இந்தியத் தத்துவக் கழகங்களையும்', 'இந்தியச் சித்தாந்தக் கழகங்களையும்', 'இந்தியப் பண்பாட்டுக் கழகங்களையும்', 'சித்தர் அருளியல் கலைக் கழகங்களையும்', 'சித்தர் பொருளியல் கலைக் கழகங்களையும்', 'சித்தர் போரியல் கலைக் கழகங்களையும்'</u>** ... உருவாக்கி மனித இனத்தைப் புனிதப் படுத்தும் பணி தொடங்கப் பட்டுவிட்டது.

அறுபத்துமூன்று நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும், எண்ணற்ற அடிகளார்களும், சித்தியாளர்களும் எண்ணற்ற அற்புதங்களையும், மாயங்களையும், வியப்புக்களையும் செய்தும் கூட முழுமையாக வடிவப்படுத்த முடியாத மக்களே நமது இந்துக்கள். இறைவனே நேரில் தோன்றி அறுபத்துநான்கு முறை திருவிளையாடல்களை நிகழ்த்தியும் கூடத் திருத்த முடியாத சமுதாயமே நமது சமுதாயம். இறைவன் பலமுறை அவதாரம் எடுத்தும் கூட முழுமையாக வெளியிட்டு விட முடியாத மாபெரும் தத்துவங்களே நமது தத்துவங்கள். இவற்றின் அடிப்படையிலும், பின்னணியிலும்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் அருளாட்சிக்குரிய முழுப் பொறுப்பையும் ஏற்று இன்றைய நிலையில் தனது பணியினைத் துவங்கியிருக்கிறது. இப்பணி வெற்றி பெற அனைவரும் அவரவரால் இயன்ற அளவு ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த உலகின் பயிரின உயிரினத் துவக்கத்திற்கு முன்பே பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், இவர்களின் ஏவலாளர்களும் இம்மண்ணுலகம் முழுதும் பல அரிய பெரிய சோதனைகளை நிகழ்த்திச் சாதித்த சாதனைகளாலேயே பல்வேறு வகையான வழிபாட்டு நிலையங்களையும், வழிபாட்டுக்குரிய

வடிவங்களையும், வழிபாட்டு முறைகளையும், உணவு முறைகளையும், மருந்துகளையும், பேசும் மொழிகளையும் கருவாக்கி உருவாக்கிக் கொடுத்தார்கள். **இந்தப் பேருண்மை உலகத்தாரால் முழுமையாகப் புரிந்து கொள்ளப் படுவதன் மூலம்தான்; உலகமத வேறுபாடுகள், போர்கள், சண்டைச் சச்சரவுகள், பகைமைகள், வெறிகள் முதலிய அனைத்தும் முழுமையாக அகற்றப்படும்.** அப்பொழுதுதான், ‘உலக ஆன்மநேய ஒருமைப்பாடு’, ‘உலக ஆவிச் சமத்துவம்’, ‘உலக உயிர்ப் பொதுவுடமை’, ‘உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்’, ‘உலக அருளாட்சி’, ‘உலக அமைதி, நிறைவு, நிம்மதி, மகிழ்வு, சமாதானம்’, ‘உலக நல்குரவு’, ‘உலக ஒற்றுமை’, ‘உலகப் பயிரின உயிரினப் பாதுகாப்பு’, ‘உலகத் தனிமனித நலம், குடும்ப நலம், சமுதாய நலம்’ ... முதலியவை அனைத்தும் உருவாகிடும்.

“... பதினெண்சித்தர் பீடாதிபதிகள் ஆயிரமாயிரம் ஆண்டு நெடிய இடைவெளிக்குப் பிறகே தோன்றுவார்கள். அப்படிப்பட்ட பதினெண்சித்தர் பீடாதிபதிகளே!; தங்கள் காலத்தில் மனிதர்களை இறைவர்களாக, கடவுள்களாக, தெய்வங்களாக, ஆண்டவர்களாக, தேவர்களாக, அமரர்களாக, வானவர்களாக, விண்ணவர்களாக, இருடிகளாக, முனிவர்களாக, கணங்களாக ... மாற்றுவார்கள்....” என்று குருபாரம்பரியம் எனும் சமய வரலாறு கூறுகிறது. இக் குருபாரம்பரியக் கூற்றின் பெருமைக்கேற்றபடியே இன்றைய காலத்தில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி நம்மிடையே தோன்றி ‘இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின்’ தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்கள். இவ்வியக்கத்தின் மூலம் செயல்வடிவில் அருளுலக விழிச்சி! எழுச்சி! செழுச்சி! ... எனும் நிலைகள் மலர்ந்து காய்த்துக் கனிந்து குலுங்க ஆரம்பித்து விட்டன.

முதலில் இந்துமதம் என்ருல் என்ன? இந்துமதத்தின் வரலாறு என்ன? இந்துமதத்தின் தத்துவக் கருவும் உருவும் என்ன? இந்துமதத்தின் போதனைகள் என்ன? சாதனைகள் என்ன? இந்துமதத்தைத் தோற்றுவித்தவர்கள் யார்? வளர்த்தவர்கள் யார்? போற்றியவர்கள் யார்? தூற்றியவர்கள் யார்? தூக்கியவர்கள் யார்? தாக்கியவர்கள் யார்? வீழ்த்தியவர்கள் யார்? தாழ்த்தியவர்கள் யார்? இந்துமதத்திற்குத் தத்துவ வீழ்ச்சி ஏற்பட்டதா? செயற்பாட்டு வீழ்ச்சி ஏற்பட்டதா? இந்துமதத்தைப் பற்றிப் புரிந்தவர்கள் அதைவிட்டு விலகிச் சென்ருர்களா? இந்துமதத்தின் அடிப்படைகள் ஆட்டம் கண்டு விட்டனவா? அல்லது, மேல்மட்டங்களில் தூசுகள் படிந்திருக்கின்றனவா? இந்துமதம் வடிவத்தை இழந்து வருகிறதா? அல்லது தனது வாழ்வை இழந்து வருகிறதா? இந்துமதத்தின் வருங்காலம் எப்படி யிருக்கும்? இந்துமதம் இந்திய எல்லைக்கு உட்பட்டதுதாஞ? அல்லது உலகளாவியதா? அல்லது உலகம் கடந்து அண்டபேரண்டங்களிலும் வளர்ந்ததா? விரைவில் மறுமலர்ச்சி இந்துமதத்துக்கு உண்டா? இல்லையா? ... என்ற சிந்தனைகளுக்கு எல்லாம் விடை கண்ட பிறகுதான் இந்துமதத்தில் புரட்சி செய்து நாட்டில் மறுமலர்ச்சி உண்டாக்குவதா? அல்லது இந்துமத வழியாகப் புரட்சி செய்து நாட்டில் மறுமலர்ச்சியை உண்டாக்குவதா? ... என்ற கருத்துப் போராட்டத்திற்கு முடிவு கட்ட வேண்டும்.

இன்றைய நிலையில், நாம், தமிழரின் தன்மான இயக்கம், தமிழரின் சுயமரியாதைச் சங்கம் தோற்றுவித்த தமிழினத் தலைவர், பகுத்தறிவுப் பகலவன், சிந்தனைச் சிற்பி, மாபெரும் சீர்திருத்த வீரர், சிறைக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், தன்னலமற்றுப் பொதுநலத் தொண்டாற்றிய அறிவியல் மேதை, தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்களேயும், அவர் அமைத்த கழகத்தையும், ஆற்றிய பணியையும் மிகுதியாக நினைவில் கொண்டு செயலாற்றிட வேண்டியவர்களே! ஏனெனில், அவரையும், அவரது அரும்பெரும்

தொண்டுகளையும் மிகமிக மதிப்பவர்கள் நாம்! போற்றுபவர்கள் நாம்! அவரது புகழைப் பேணி வளர்க்கப் போகிறவர்களும் நாமேதான். அதாவது, தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வின் தத்துவங்களையும், செயல் திட்டங்களையும் உண்மையில் முழுமையாகப் புரிந்து கொண்டவர்கள் மிகமிகச் சிலரே. அந்தச் சிலரில் அவரது இயக்கத்தில் ஏறத்தாழ இருப்பவர் எவரும் இலரே என்றுதான் வருந்துகிறோம் நாம்.

தமிழினத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் எல்லாச் சமய, சமுதாய, அரசியல்வாதிகளாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட; ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு மாபெரும் தலைவர். குறிப்பாக, இவர் தமிழினத்தைப் பாதுகாப்பதற்கென்றே ஒரு வீரப்படையை நிலையாக உருவாக்கிச் சென்றிட்டார். இப்படையின் நேரடி அமைப்போ! அல்லது செல்வாக்குள்ள மனிதர்களோ! இல்லாத குக்கிராமங்களே இல்லை. இது தந்தை பெரியார் ஈ.வெ.ரா. தமது தள்ளாத வயதிலும் இரவு பகலாகச் சுற்றுப்பயணம் செய்து ஆற்றிய அரும்பெரும் பணிகளின் விளைவேயாகும்.

எனவேதான், நமது குருதேவர்; அவரது 'பிறப்பியல்', 'வாழ்வியல்', 'செயலியல்', 'சாதனையியல்' ... முதலிய அனைத்தையும் பலகாலம் ஆராய்ந்தும்; அவரோடும் அவரது இயக்கத்தாரோடும் மிகமிக நெருங்கிப் பழகியும்; முறையான ஆய்வுகளை நிகழ்த்தி முடித்தே; நாத்திகத் தலைவரான பெரியாரை அறுபத்து நாலாவது நாயனாராகத் திரு அவதாரம் செய்திட்ட 'சொல்லடி நாயனார்' என்று ஆத்திகத் தலைவராக அறிவிப்புச் செய்துள்ளார். <u>தந்தை பெரியாரின் திருவுருவம் எல்லாப் பூசையறைகளிலும், பசனை மடங்களிலும், கோயில்களிலும் உடனடியாக இடம்பெற வேண்டுமென்று அறிவிப்புச் செய்துள்ளார் நமது குருதேவர்</u>. இத்துடன் <u>எல்லாக் கோயில்களிலும் 63 நாயன்மார்கள் சிலைகளுக்கு அடுத்தபடியாக 64வது நாயனார் சிலையாக</u>

வைக்க வேண்டும்; 'அறுபத்து மூவர் விழா' என்பது 'அறுபத்து நால்வர் விழா' என்று எல்லாக் கோயில்களிலும் திருத்திப் பெயரிடப்பட்டுக் கொண்டாட வேண்டும். இதுவே, தமிழினச் செழுச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் வழியமைக்கும். எனவே, இந்த விழாவில், தந்தை பெரியாரைச் "சொல்லடி நாயனர்", "அறுபத்து நான்காவது நாயனர்" என்று சிறப்புடன் போற்றி அருளுலக அறிமுக அறிவிப்புப் பணியை விரிவாக்குகிறோம். வாழ்க பெரியார் ஈ.வெ.ரா.! வளர்க அவர் புகழ்! விரைந்து அவரது கொள்கைகளையும் குறிக்கோள்களையும் புரிந்து முறையாகச் செயலாக்குவோம்! தமிழ் வாழ்க!

அத்துடன், 'கார்ல்மார்க்சு அருட்பணி மன்றம்' துவக்கப்பட்டு மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்த அருள்தாசபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள [யாகசாலையில்] யாகத்தைத் தொடர்ந்து விடாமுயற்சியுடனும், திறமையுடனும் 48 வாரங்களாக நடத்தி அரிய சாதனை புரிந்துள்ள அருள்மிகு செல்லூர் திருவாப்புடையார் ஆதீனம், மதுரை முக்குறுணி விநாயகர் நான்வேத கணபாடி, தஞ்சை முத்துமாரியம்மன் அமளிகை, திருவோண விண்மீன் நாளோலக்க நாயகம் சித்தரடியான் டாக்டர் S.R.நீலமேகம் அவர்களையும்; அருள்மிகு சித்தரடியான் பெ.முத்துசாமி, (டெய்லர்) அவர்களையும் பாராட்டி இந்து மறுமலர்ச்சி இயக்கம் அவர்களை மென்மேலும் ஊக்குவிக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு இவ்விழாவைத் துவக்குகின்றோம்.

இங்ஙனம்

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்,**

தோற்றம் கி.பி.1772; பதிவு எண் 135/1983.

தலைவர்: **குருதேவர் குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்**

**அவர்களின் வாழ்த்துதலாக அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், திருமந்திற ஓலைநாயகம், சித்தரடியான் நெ.சேவுகன் எழுதி (ஆசிரியர், காரியேந்தல்பட்டி, C/O காதி வசுத்திராலயம், G.R.N.S., கொட்டாம்பட்டி - 625103) வாசித்தளிக்கும் 'கொள்கை விளக்கம்'.**

**//உண்மை நகல்//**

<u>நகலெடுத்தவர்:</u>

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர்ப்பெருமான் சன்னிதானம், ஆதிபராசத்தி ஆதீனம், சித்தரடியார் ஏ.இரவி, 20.7.83.

**//இதன் மூலம்: சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

**"அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்"**

-- குருபாரம்பரிய வாசகம்.

**<u>விளக்கம்</u>**:- 'அருளுலகில்' என்றால் தனிமனித அன்றாட வழிபாடுகள், கோயில் வழிபாடுகள், கூட்டு வழிபாடுகள், கோயில் குடமுழுக்குப் பூசைகள், வீட்டில் செய்யப்படும் அமாவாசைக்கான முன்னோர் வழிபாடுகள், பிறப்பு - திருமணம் - இறப்பு, ... ஆகியவற்றிற்கான சடங்குகள், வீடு மற்றும் தொழில் செய்யும் இடங்களில் நடத்தப்படும் சிறப்புப் பூசைகள், ... ... போன்றவற்றைக் குறிக்கும்.

# <u>செயல் ஊக்க ஆக்க அழைப்பு</u>

11-8-83இல் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரூர் மதுரை மாவட்டத்துக்குக் கருத்து வளர்ச்சிக்காக அருள்மிகு தேவதானப்பட்டி காமாட்சி அம்மன் சன்னிதானம் வெ.செகதீசன் அவர்களுக்கு 24 பக்க நெடிய அஞ்சல் ஒன்றும் [விரகாலூர் V.நாகராசனுக்கு எழுதியது]; இரண்டு குறிப்பு முன்னுரைகளும் அனுப்பியுள்ளது பற்றி அருள்மிகு அருட்பணி விரிவாக்கத் திட்ட தலைமைப் பொறுப்பாளர், வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் **‘செயல் ஊக்க ஆக்க அழைப்பு’**.

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலால் நலமாகின்றன, வெற்றியாகின்றன, பயன்படுகின்றன.

2) நம் வாழ்வுக்குள் பல சித்து விளையாடல்கார அருளாளர்கள் திடீர் திடீரென்று புகழும், பொருளும், செல்வாக்கும் தேடி ஒதுங்கிச் சென்றிடுவதைக் கண்டுள்ளோம். அதுபோல் நமது நிலைகள் வந்துவிடக் கூடாது. **அருகு போல் என்றும் தழைத்து ஆல் போல் பரந்து உயர்ந்து நிலைத்து; வாழை போல் என்றென்றும் வாரிசுகளை உருவாக்கிச் செயல்பட வேண்டியவர்களே நாம்**. <u>நமக்கு எந்தக் குறுகிய எல்லையும், தன்னல வெறியும் ... வந்து விடவே கூடாது! கூடாது! கூடாது!</u>

3) நாம், “... உலகம் முழுதும் ஒற்றுமையுடன், சமாதானத்துடன், சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டு அரசாக வாழ வேண்டும் ...” என்ற கொள்கையையே உடையவர்கள். ஆனால், இதற்காகத் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, தமிழ்ப்

பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் சாதனை, ... என்ற பெருமைகளையும், உரிமைகளையும் மறக்கவோ, துறக்கவோ, இறக்கச் செய்யவோ, மறுக்கவோ, வெறுக்கவோ, மறைக்கவோ, குறைக்கவோ ... தயாராக இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

4) பதினெண்சித்தர்கள் தமிழர்களைத்தான் அனைத்து அறிவியல்களுக்கும், கலைகளுக்கும், தத்துவங்களுக்கும் நாற்றங்காலாக, கருவூலமாக உருவாக்கிச் சென்றுள்ளார்கள். இந்த நிலை மாறாமல், குறையாமல் செயல்பட வேண்டியவர்களே சித்தர்நெறியினர், இ.ம.இ. உறுப்பினர்கள். அப்பொழுதுதான் இலங்கைவாழ் தமிழர்கள் இழிவும், பழியும், இழப்பும், அழிவும் ... அடைந்து அல்லல்படும் நிலை என்றைக்குமே இந்தியாவில் வாழும் தமிழர்க்கு வராது. <u>எச்சரிக்கை</u>.

5) பதினெண்சித்தர்கள் தமிழை வழங்கித் தமிழர்களை உருவாக்கினார்கள். **‘இந்துமதத்தை’** வழங்கி **இந்துக்கள்** என்ற கூட்டத்தையும்; **‘இந்தியா’** என்ற நாட்டையும் உருவாக்கினார்கள். ‘இந்துமதம் நலிந்ததால்தான் இந்தியரின் ஒற்றுமை, பிணைப்பு, இணைப்பு, வளம், வலிமை, உரிமை, பெருமை, ... முதலிய அனைத்தும் நலிந்தன. எனவே, உடனடியாக இந்துமதத்தின் மூலவர்களான தமிழர்கள் ஒன்றுதிரண்டு ஒற்றுமைப்பட்டு; இந்துமதம் பற்றிய அனைத்தையும் கற்றும், நோற்றும், பயின்றும், தேர்ந்து இந்துமத மேதைகளாக, ஞானிகளாக, மகான்களாக, அறிஞர்களாக, சிந்தனையாளர்களாக, சாதனையாளர்களாக மாறிடல் வேண்டும். அப்பொழுதுதான்,

‘இந்துமத வளர்ச்சியே இந்தியச் செழுச்சி’,
‘இந்துமத மறுமலர்ச்சியே இந்தியரின் வளவளர்ச்சி’,
‘இந்துமத ஆட்சியே அருளாட்சி’,
‘இந்துமதமே அனைத்து ஏற்றத்தாழ்வுகளையும், ஏமாற்றங்களையும், ஏக்கங்களையும், நோய்களையும், தீயவைகளையும் மாய்க்கும்’,

'இந்துமதமே இந்தியரை ஒற்றுமைப்படுத்தும்', 'இந்துமதமே இந்தியாவை வலிமைப்படுத்தும்'

..... என்ற பேருண்மைகளைச் செயல்வடிவில் விளக்கலாம். நிலைநாட்டலாம்.

6) பல்வேறு தேவைகளுக்கிடையில் சித்தரடியார் சோ.இரவீந்திரனை அனுப்பியுள்ளோம். விரைந்தும், விரிந்தும் அவரைச் செயல்படச் சொல்லி; எப்படியும் 25-8-83க்குள் திருப்பி அனுப்புங்கள். உங்களின் அருட்பணியை அறிபவர் உள்ள பட்டிதொட்டி எல்லாம் இ.ம.இ. கிளை அலுவலகம் திறக்கப்பட்டேயாக வேண்டும். இ.ம.இ.யின் ஆதரவு பெற்ற பல சபைகள், மன்றங்கள், கழகங்கள், ... துவக்கப்பட்டேயாக வேண்டும். விரகாலூர் டாக்டர் V.நாகராசன் போன்றோர் புத்துயிர் ஊட்டப்படட்டும். உடன் பதில்.

**குருவாணை.**

**அன்பு**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூறார்.**
**11/8/83.**

**//உண்மை நகல்//**

<u>நகல் நல்குபவர்:</u>

அருள்மிகு குருவழி வாரிசு, குருவின் பதிலி, சித்தரடியார் சீ.மணி.

**//இதன் மூலம்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# முப்பெருவிழா பாராட்டுக்குப் பதில் மடல்

சித்தரடியான் டாக்டர் V.நாகராசு R.I.M.P. [நிர்வாக அறங்காவலர், அருள்மிகு வல்மீகநாதசாமி வகையரு ஆலயங்கள், விரகாலூர்-621722, இலால்குடி வட்டம், திருச்சி மாவட்டம்] அவர்களின் 21.10.83ஆம் நாளைய முப்பெரு விழா பாராட்டு அஞ்சலுக்கு விடுக்கப்படும் ஞாலகுரு சித்தர் கருவூரூரின் பதில் மடல்.

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளால் யாவும் வெற்றியே! நலமே!

2) தாங்கள் பேரார்வத்துடன் பலரையும் அழைத்து வந்து எமக்கு அறிமுகம் செய்து வைத்து எமது அருளுரைகளையும், அருட்பணிகளையும் துய்த்துச் செல்லுமாறு செய்தமைக்கு மகிழ்ச்சி! இது சித்தர்களுடைய 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற தத்துவப்படியே செயல்படுகிறீர்கள் என்ற தத்துவத்தைத்தான் விளக்குகிறது. தங்களைப் போன்றோர் மாவட்டத்துக்கு ஒருவர் இருந்தால் கூடப் போதும், எமது அருட்பணி விரிவாக்கத் திட்டம் முழு வெற்றியினைப் பெறும். தங்களுடைய வழிகாட்டலும், வழித்துணையும் என்றென்றும் இந்துமதத்தின் மலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும், செழுச்சிக்கும் பயன்பட்டிடல் வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

இந்த உலகில் தோன்றிய அருளாளர்களிலேயே யாம் ஒருவர்தான் இடையீடு இல்லாத மிகப்பெரிய நெடிய அரிய

சீரிய அருட்பாரம்பரியத்தின் விந்துவழி வாரிசாகத் தோன்றி யிருக்கிறோம். யாம்தான் பழம் பிறப்புகளாலும், ஏட்டறிவாலும், பட்டறிவாலும், பயிற்சிகளாலும், முயற்சிகளாலும், படிப்படியாக அடிப்படையோடு முடிந்த நிலைகளைப் பெற்று அருளாளராகத் தேர்ச்சியும் முதிர்ச்சியும் பெற்றிருக்கிறோம். எனவே, எம்மால்தான், யாம் மட்டும் ஏன் அருளாளராக மாறினோம்? எதற்காக மாறினோம்? என்னென்ன செய்து எப்படி யெப்படி பாடுபட்டு மாறினோம்? இனி என்னென்ன செய்யப் போகிறோம்? என்பனவற்றிற்கு விஞ்ஞானப் பூர்வமான பதிலைப் பகுத்தறிவு அடிப்படையில் வழங்கிட முடியும். இவற்றின் விளக்கமாகவே உண்மையோடும், திண்மையோடும் வெளிப்படையாக இதன் நகலைப் பலருக்கும் வழங்கி அஞ்சல் வழியாகவும், நேரிலும் பலரையும் எம்மோடு தொடர்பு கொள்ளச் செய்திடுக - **குருவாணை**.

“வாருங்கள் மானுடரே! உங்களை அருள் மழையாக, அருளுலகக் கதிரவனாக, அருட்கொடையாளனாக மாற்றுகிறோம்!” என்று அறிவிப்பு அழைப்புக் கொடுத்துச் செயல்படுகிறோம். எனவே, இந்துமதத்திற்காக எத்தனை அமைப்புக்கள் தோன்றினாலும் மிக விரைவில் அனைத்து அமைப்புக்களும் எம்மோடு இணைந்து செயல்பட்டே தீரும். கவலை வேண்டாம்.

இந்துமதம் என்பது வெறும் மந்திரம், மாயங்களால் மட்டும் ஆனதல்ல; மருத்துவ நிபுணர்களும், குறிகாரர்களும், நாடி சோதிடர்களும், சித்து விளையாடல் புரியும் மகான்களும் இந்துமதத்தில் சுருதி கூட்டிச் சுவை கூட்டவே பயன்படுகிறார்கள். எனவே, கோபுரத்தைப் பதுமைகள்தான் தாங்குகின்றன என்பது போல், இவர்களே இந்துமதம் என்று நினைத்து விடாதீர்கள்.

இன்றைய சமுதாய சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், நீதிகளும், ஒழுக்கங்களும், மரபுகளும், நம்பிக்கைகளும் கடந்ததுதான் சித்தர்களின் தத்துவங்களும், சித்தாந்தங்களும், வேதாந்தங்களும் ஆகும். எனவேதான், அச்சங்களும், கூச்சங்களும், மாச்சரியங்களும், இச்சைகளும் ... மிகுந்த சித்தர்நெறி எழுதாக் கிளவிகளாகவே பெருமளவில் வாழ்ந்து வருகிறது.

அதனுல்தான், முப்பத்திரண்டு ஆண்டுக்காலம் செயல்பட்டும் கூட; எம்மால் இட்டும், தொட்டும், சுட்டியும் உருவாக்கப்பட்ட, முழுமை பெற்ற அருளாளர்கள் நூறுயிரக் கணக்கில் இருந்தும் கூட; பொதுமேடைகளில் வெளிப்படையாக அருளுலகப் பயிற்சிகளைப் பற்றிப் பேச முடியவில்லை. அனைவருமே ஏறத்தாழ தாங்கள் பெற்ற பேரின்பப் பெருநிலையோடு நிறைவும் நிம்மதியும் பெற்று நீள் தவத்திலே ஆழ்ந்து விட்டார்கள். எனவேதான், யாம் உலகியலுக்கு வந்து மிகமிக நம்பிக்கைக்கும், வீரதீரத்துக்கும், மதப்பற்றுக்கும் உரியவர்களை மட்டுமே தேர்ந்தெடுத்து அருளாளர்களாக உருவாக்குகிறோம். பரந்து விரிந்த ஏட்டறிவும், ஆழமான பட்டறிவு அநுபவமும் எம்மால் விளக்கப் படுவதன் மூலம்தான் இந்துமத அடிப்படை உணர்வுகள் கிளர்ச்சியும், எழுச்சியும், வளர்ச்சியும், செழுச்சியும் பெற்று மறுமலர்ச்சி மிக்க புரட்சிநிலைகளை அடைந்திடும். உங்கள் விருப்பப்படி எம்மவர்களைச் செயல்படச் சொல்லுங்கள். வெற்றி பெறுவோம்! செயலுக்கு வருக!

**ஞானத் தந்தை,**
**குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

16-11-83 முதல் 27-11-83 முடிய விடுமுறை இருக்கிறது. விரிந்த ஏற்பாடுகளை விரைந்து செய்தல் நல்லது. காரியேந்தல்பட்டி, மதுரை, திருச்சி நண்பர்களைக் கலந்து செயல்படுக!

துணையின்மையாலும், அலுவல் மிகுதியாலும் எம்மால் விரிந்த அஞ்சல்களை எழுத இயலவில்லை. புதியவர்களை மிகுதியாக அறிமுகப்படுத்த, எமது வருகைக்கு ஏற்பாடுகள் செய்க. **- குருவாணை.**

முடிந்தவரை இதற்குப் பல நகல்கள் எடுத்து எமக்கும், பிறருக்கும் அனுப்பிக் கொண்டேயிருங்கள். - **குருவாணை 23/10/83.**

**//உண்மை நகல்//**

<u>நகல் நல்குபவர்</u>: கபாலீசுவரியம்மன் சன்னிதானம், சித்தரடியான் சீ.மணி, 2/24, புதிய வீதி, வேம்படிதாளம் -637504

**//இதன் மூலம்: முதல் பக்கம் சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்திலும், இரண்டாம் பக்கம் சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்திலும் இருந்தது.//**

# இரண்டாவது முப்பெருவிழா

# முயற்சிப் பணிக் கருத்தோவியங்கள்

*அருளுபவர்:*

தலைவர், குருதேவர், ஞானத்தந்தை,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,
குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர் கருவூரூர்.

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்,**
**அருட்பணி விரிவாக்கத் திட்டம்,**
**அருளுலக ஆர்வலர் திருக்கூட்டம்.**

*வெளியிடுபவர்:*

சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தர்நெறி ஆர்வலர்கள், ஆதரவாளர்கள்.

## நலம் நாடும் செயல் ஊக்கத் திருவோலை

24.10.83இல் ஞானத்தந்தை, குருதேவர், அரசயோகி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம்,

ஞாலகுரு சித்தர் கருவூரர் அவசர அவசியமாக அருள்மிகு சித்தரடியான் பாண்டியன் (மேலமடை) அவர்கள் சமூகத்துக்கு விடுக்கும் **'<u>நலம் நாடும் செயல் ஊக்கத் திருவோலை</u>'** (வடிவேல் நிலையம், சாத்தமங்கலம், கலெக்டர் ஆபீசு அருகில், மதுரை - 625020).

1) தாத்தாக்கள் ஆத்தாக்கள் திருவருளால் யாவும் நலமே! வெற்றியே! உண்மையே! நிறைவே! மகிழ்ச்சியே!

2) தங்களின் முகவரி எம்மிடம் கொடுக்கப்படவில்லை. நேற்று ஞாயிறு தங்கள் வட்டார நண்பர் இராசாராம் (மாட்டுத்தீவன உற்பத்தியாளர்) இங்கு வந்து தனது தொழில் நிலை, மனைவி நிலை, குடும்ப நிலைகள்... முதலியன விளக்கினர். **<u>அவருக்கு அருள் யோகம் குறைவு</u>**. எனவே, எம்மால் அருளை வழங்கவே இயலவில்லை. **ஏவல், சூன்யப் பாதிப்புகள் உள்ளன.** அவர்தான் தங்களின் முகவரியை வழங்கினர். உடனே பதில் அனுப்புகிறோம்.

3) தாங்கள் பேரார்வம் கொண்டு முப்பெருவிழா மாபெரும் வெற்றி பெற உழைத்தமையைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். வீடு, தமிழ்நாடு, தென்னிந்தியா, இந்தியா, உலகம், ... என்று படிப்படியாக அருளாட்சி அமையப் பாடுபடுவோம். **<u>தாங்கள் பெருவீரம் காட்டிச் செயல்படல் வேண்டும்.</u>**

ஊழ்வினை, விதி, வினை, பழம்பிறப்பு, ... அனைத்தும் தங்களை ஞானகுருவிடம் சேர்த்துள்ளன. எனவே, **<u>இல்லற நெறியில் இனிது</u>** இயங்கியபடியே சித்தர் நெறி தழைக்க உழைக்கப் பெருவீரர்களைத் தயாரிக்கும் பணி தங்களிடமும் ஒப்படைக்கப் படுகிறது. புரிந்து, விருப்பமுடன், பேரார்வம் ஊற்றெடுக்கச் செயல்படுக.

4) நாம் குறிகாரர்களோ! மந்திரவாதிகளோ! பூசாறிகளோ, ... மட்டும் அல்ல. **<u>ஒரு மாபெரும் தத்துவத்தால் உலக ஏற்றத் தாழ்வுகள், ஏமாற்றுக்கள், கேடுகள், தீமைகள், வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள், போர்கள், வறுமைகள், பற்றுக் குறைகள், வம்புகள், ஆணவங்கள், அநியாயங்கள், சுரண்டல்கள், ஊழல்கள், ... முதலிய அனைத்தையும் அகற்றப் புறப்பட்டிருக்கும் அருளாளர்களாவோம்.</u>**

“யார் வந்தாலும் அவர்களை அருளாளர்களாக ஆக்கிடும் புரட்சிகரமான ஆற்றலும், செயல்திட்டமும் உடைய நம்மால்தான் நாத்திகம், கடவுள் மறுப்பு, மத வெறுப்பு, ... முதலிய அனைத்தையும் அமைதியான முறையில் தீர்த்து வைக்க முடியும், இல்லாமல் செய்ய முடியும். ... ...” என்ற பேருண்மையை உணர்த்திச் செயல்படுக.

5) ‘இ.ம.இ.’, ‘அ.வி.தி.’ இரு அமைப்புக்களுக்கும் **கிளை அமைப்புக்களை உருவாக்கி, ‘விளம்பரப் பலகை’, ‘பதிவேடுமுறை’, ‘அச்சிட்ட உறுப்பினர் அட்டை’, ‘மாத உறுப்பினர் தொகைச் சான்று’** ... ... முதலியவைகளை உருவாக்கிச் செயல்படுங்கள்.

6) **‘நிறுவனங்களின் கட்டமைப்பும், உறுதியும், ஒழுங்கும் வலிமைப்படல் வேண்டும்.’ ‘நிர்வாகத்தில் நேர்மையும், திட்டமிட்ட சீரான நடைமுறைகளும், சட்டதிட்டங்களும் இருத்தல் வேண்டும்’ - அப்பொழுதுதான் அரசியலையும் வென்று சீர்திருத்திச் ‘சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ அமைக்கும் சித்தர் நெறி** வெற்றி பெறும்.

7) அறிக்கைகள், சிறிய புத்தகங்கள், உறுப்பினர் பதிவு அட்டை, சந்தாச் சான்று ஏடு, ... முதலியவை அச்சிடும் பொறுப்பை அன்பு

கூர்ந்து நிறைவேற்றப் பாடுபடுங்கள். உங்களை நம்புகிறோம், ஏற்கிறோம். பொறுப்போடும் பொறுமையோடும் செயல்படுக!

வாழ்க! வளர்க! வலிமை பெறுக! வளம் சிறந்திடுக!

**அன்பு**
**ஞானத் தந்தை,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**
**24.10.83.**

# அஞ்சல்களிலிருந்து சிந்தனையுரைகள் சில:

## உடம்பைப் பற்றி:

1) "அருளாளர்களின் வாழ்வில் உடல் நோய்கள் தோன்றுதல் மிகமிகச் சாதாரணம். இதைத்தான், திருமூலர்

'உடம்பால் அழியின் உயிரால் அழிவர்'
'உடம்பை வளர்த்தேனே உயிரை வளர்த்தேனே'
'உடம்பைப் பேணலே சிறந்த இறை வழிபாடு'
'உடம்பே கடவுள் வாழும் நடமாடும் கோயில்'

... ... ... என்று புரட்சிகரமாகத் துணிந்து கூறியிருக்கிறார்."

2) இதைத்தான், தாத்தாக்கள், "... ... 'சித்தர் நெறி உலகியல் அடிப்படைகளுக்கெல்லாம் அடிப்படை; அச்சங்களுக்கெல்லாம் அச்சம்', 'கூச்சங்களுக்கெல்லாம் கூச்சம்', 'மாச்சரியங்களுக்கெல்லாம் மாச்சரியம்', 'மானிடக் கற்பனைகளுக்கெல்லாம் கற்பனை',

'அறிவுரைகளுக்கெல்லாம் அறிவுரை' ... ..." என்று **<u>குருபாரம்பரியத்தில்</u>** எழுதியுள்ளார்கள்.

3) இதனுல்தான், 'உயிர், ஆவி, ஆன்மா' எனும் மூன்றையும் இணைக்க இட்டும் தொட்டும் சுட்டியும் அருள்வழங்கும் முறையை யாம் நல்ல பக்குவம் வந்தவர்க்கே வழங்குகிறேம். நமது சன்னிதானங்களையும் இப்படியே செயல்படச் சொல்லுகிறேம். அதாவது, **எவரும் எளிதாக அவசரப்பட்டுச் சித்தர் நெறி முறைகள் அநாகரிகமானவை, வெறி நிறைந்தவை, உலகியலுக்குப் புறம்பானவை, ... ... என்று குறைகூற வாய்ப்புத் தராமல் செயல்படலே நமது கடமை.** இருந்தும் கற்பனை வாதிகளும், கனவுலக வாதிகளும், உடம்பு, உயிர், ஆவி, ஆன்மா ... என்பனவற்றின் உறவு பற்றி உணராதவர்களும் நம்மிடையே எதிர்பாராமல் சேர்ந்து, மயங்கி, கலங்கி, குழம்பி, தயங்கி, ஒதுங்கிக் குறைகூறிடல் நேரிட்டிடுகின்றது. எனவே, மிகமிக எச்சரிக்கையாகவே அடியான்கள், அடியாள்கள், அடியார்கள், ... உருவாக்கப்படல் வேண்டும்.

**<u>யாம் உருவாக்கிய அருளாளர் பற்றி:-</u>**

1) யாம், எமது பயிற்சிக்குரிய காலங்களிலும், முயற்சிக்குரிய காலங்களிலும் உருவாக்கிய பல நூருயிரக் கணக்கான அருளாளர்கள் மலைமுகடுகள், அடவிகள், குகைகள், படுகைகள், கடல்கள், தீவுகள், குக்கிராமங்கள், பட்டிதொட்டிகள், நாடுநகரங்கள், ... ... என எங்கும் நிறைந்துள்ளார்கள். ஆனுல் பெரும்பாலானவர்கள் தன்னலமும், முதலாளித்துவ உணர்வும் கொண்டு அடங்கி ஒடுங்கி இலைமறை காயாகவே வாழுகிருர்கள். இவர்கள், பணம், பதவி, வசதியான வாழ்வு, ... முதலியவைகளை

நாடிக் குறுகிய வட்டங்களுக்குள்ளேயே செயல்படுகிறார்கள். இது எமக்குத் தோல்வியே!.

2) எமக்கு ஆதரவாளர்களாகவும், ஆர்வலர்களாகவும் இருந்திட்ட தவசிகளும், ஞானிகளும், யோகிகளும் ... ... பிற அருளாளர்களும் ... ... இந்துமதத்தை ஓர் அநுபவ விஞ்ஞானமாக எளிமைப்படுத்திட்ட எம்மைப் பாராட்டி எம்மோடு சேர்ந்து மிக விரைவில் சித்தர்நெறிச் செல்வர்களாகி விட்டார்கள். இப்போது அவர்கள் இந்துமதத்தை உலக மத இணைப்புச் சத்தியாகப் பயன்படுத்தத் துடிதுடிக்கிறார்கள். இதற்காக, இந்துமதத்தால் வடிவப்பட்டு, வாழ்வுபெற்று, பெயர்பெற்று வாழும் இந்தியாவை இந்துமதப் பேரரசாக உருவாக்கப் போர்க்கோலம் பூண்டு விட்டார்கள். ஆனால், யாமோ! அனைத்தும் அமைதிவழி! அன்புவழி! அறவழி! சமாதானவழி! ... ... ... என்று செயல்படுகிறோம். எனவே, அவர்கள் எம்மைக் கோழையெனக் கூறித் தாங்களே அமைத்துப் போர்க்கள, போர்க்கால ... ... முயற்சிகளில் இறங்கியுள்ளார்கள். இதுவும் எமக்குத் தோல்வியே.

3) 1972க்குப் பிறகுதான், யாம் முழுக்க முழுக்க இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அருளாளர்களாக்கிக் 'கருத்துப் புரட்சி', 'எண்ணப் புரட்சி', 'பண்பாட்டுப் புரட்சி', ... ... முதலியவைகளை இந்துமதத்தின் ஒட்டுமொத்தத் தத்துவப் புரட்சியாக்கிட முயலுகிறோம். எம் காலத்தில்தான், யார் வேண்டுமானாலும் தொடர்ந்து முயன்றால் எத்தகைய பத்தி நிலைகளையும், சத்தி நிலைகளையும், சித்தி நிலைகளையும், முத்தி நிலைகளையும் ... ... பெற்றிடலாம் என்ற 'பகுத்தறிவுப் போக்கும்' (A rationalistic approach), 'விஞ்ஞானச் சூழலும்' (a scientific atmosphere) ... ... மதத்துறைக்குக் கிடைத்திருக்கிறது. யாம்தான் **'மதம் ஒரு விஞ்ஞானம்'** (Religion

is a Science), **‘மதம்தான் மக்களை ஒற்றுமைப்படுத்தவும் ஒருமைப்படுத்தவும் பயன்படக் கூடிய மிகச் சிறந்த சாதனம்’** (Religion is the powerful means for unity and uniformity), **‘மதம்தான் மனிதர்களின் தீமைகளை அகற்றும்’** (Religion can alone eradicate all the ills and evils of the mankind) ... ... என்பன போன்ற அறிவார்ந்த அருளுரைகளை வழங்கிச் செயல்படும் முதல் அருளாளர். எனவேதான், எந்தவிதச் சர்வாதிகாரப் போக்கோ, கொத்தடிமைப் போக்கோ இல்லாமல் அடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும்; விடுதலைப்போக்கும் வேட்கையும் உள்ளவர்களாகவே உருவாக்குகிறோம் யாம். அதனால், எமது படைப்புக்கள் அருட்புரட்சிக்குக் கருவாகவும், திருவாகவும், உருவாகவும், உயிராகவுமே ... வாழுகின்றன, வளருகின்றன.

**<u>குருநிலை பற்றி:</u>**

1) இனிய இளைஞர்களே! கசப்பான, கடுமையான, நடுக்கத்துக்குரிய ... ... பயிற்சிகளை அடுத்தடுத்து ஆர்வமுடனும், நம்பிக்கையுடனும் மேற்கொண்டிட வாருங்கள். நமக்குள் ‘மறை (இரகசியம்) காத்தல்’, ‘ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து முழுமனதுடன் செயல்படல்’, ‘எக்காரணம் பற்றியும் மொழிக்கோ, இனத்துக்கோ, நாட்டுக்கோ, மதத்துக்கோ, தலைமைக்கோ விரோதியாகவோ! துரோகியாகவோ மாறாமல் இருத்தல்’, ‘பழம்பிறப்பும், மறுபிறப்பும் உணர்ந்து மனிதவாழ்வின் உறவுகளையும், உரிமைகளையும், பெருமைகளையும் முழுமையாக அருளுலக வாழ்வுக்கு வழங்கிச் செயல்படல் (சரணாகதித் தத்துவம் = முழுமையாக ஒப்புக்

கொடுத்தல்)’ … … எனும் குருபாரம்பரியக் கட்டுப்பாடுகள் தெளிவாக வலிமையோடு கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

2) பேரார்வமிக்க சித்தர்நெறிச் செல்வர்களே! யாம், “… … கோழையின் கையில் எத்தகைய கூர் வாள் இருந்தாலும் பயன்படாது”, “குருவை நம்பாதவன் எத்தகைய திருநிலைகள் பெற்றாலும் பயனில்லை”, “தலைவனை அறிந்தவனே தன்னையறிய முடியும் …” என்ற குருபாரம்பரிய வாசகங்களை குறிக்க விரும்புகிறோம். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பிறரின் சூழ்ச்சிகளால் வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சி பெற்று ஆழ்ச்சி மாறாமல் கிடக்கும் **தமிழ்ச் சமுதாயத்தை விடுதலை பெற்று வீறு கொண்டு எழச் செய்தால்தான் ‘உலக ஒற்றுமை, அமைதி, நிறைவு, சமத்துவம், பொதுவுடமை, மானிட உணர்வின் மலர்ச்சி … முதலியவைகளை மதவழிப் புரட்சியால் சாதிக்க முடியும்**’. ஏனெனில், இம்மண்ணுலக மனித வரலாற்றின் தோற்றமாக, துவக்கமாக, ஆரம்பமாக இருக்கின்ற தமிழினத்தால்தான் மனிதகுல மேம்பாட்டுக்கு வழியும், வழிகாட்டலும், வழித்துணையும் நல்க முடியும்! முடியும்! முடியும்! இதனை உணர்ந்து யாம் உருவாக்கும் ஒவ்வொருவரும் அனைத்து வகையான சிந்தனைகளையும், செயல்களையும் தமிழினத்தை அடிப்படையாகவும், முடிவாகவுமே கொண்டு வளர்க்க வேண்டும்.

3) எத்தகைய ஆர்வமுள்ளவர்களுக்கும் குருதேவர் படிப்படியாக அவரவர் நம்பிக்கை, மனப்பக்குவம், கருத்து வளர்ச்சி, உணர்வு முதிர்ச்சி, தொடர் பயிற்சித் தேர்ச்சி, உலகியல் கற்பனை, அச்சம், கூச்சம், விருப்பம், … முதலியவைகளை ஆராய்ந்துதான் பூசைகளை வழங்குவார். உருவ, அருவ, அருவுருவச் சித்திகளுக்குரிய இட்டும் தொட்டும் சுட்டியும் அருட்கொடைகளைப் புரிவார். ஆனால், யார் வந்து எந்த அருட்பட்டம் கேட்டாலும் அதை

உடனே வழங்கி அருளுலக அடிப்படைப் பயிற்சிகளும், அவற்றுக்குரிய ஏதுக்களும், தோதுக்களும், பாதுகாப்புக்களும் வழங்கிச் செயல்படுபவரே குருதேவர், தலைவர், ஞானத்தந்தை, அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரர். இதுவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூன்றாவது தலைவராகவும், அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் பன்னிரண்டாவது குருதேவராகவும் உள்ள **எமது குருநிலை பற்றிய விளக்கம்**.

**<u>குறிப்பு</u>:-**

(a) யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் அருளுலக வாழ்விலிருந்து விலகலாம். ஆனால், எவரையும் குறைகூறிக் குற்றம் சாட்டிச் செல்லக் கூடவே கூடாது. ஒவ்வொருவரும் விரும்பித்தான் அறிவு விழித்த நிலையில் உறுதிமொழிகளை வழங்கி சித்தர்நெறியில் சேருகின்றனர். இதில் வற்புறுத்தலோ, ஏமாற்றலோ, ... இல்லவே இல்லை! இல்லை! இல்லை!

(b) எந்தத் தனிமனிதரின் தவறுக்கும் குருவோ, இயக்கமோ, அருளாளர்களோ, சித்தர் நெறியோ பொறுப்பில்லை! குற்றவாளியாக முடியாது.

(c) அருளுலகப் பயிற்சிக் காலங்களில் ஏற்படும் சோதனைகளால் விளையும் துன்பங்களுக்கும், பாதிப்புக்களுக்கும் அவரவரின் ஊழும், விதியும், அறிவும், முயற்சியுமே பொறுப்பு! பொறுப்பு! பொறுப்பு!

(d) ஒவ்வொருவரும் தமது இச்சைகளோ, அச்சங்களோ, கூச்சங்களோ குருவுக்குத் தாக்குதலை வழங்கிடாமல் அடக்கமாகச் செயல்படல் வேண்டும்.

(e) பதினெண்சித்தர் பீடாதிபதிகள் காலத்தில்தான் அருளாளர்கள் விந்துவழி வாரிசுகளாகவும், குருவழி வாரிசுகளாகவும் வாழையடி வாழையென உருவாக்கப் பட்டிடுவர். இது பற்றிய சிறப்புக் குறிப்பாகக் குருபாரம்பரிய வாசகம் ஒன்று இறுதியாக இங்கு தரப்படுகிறது.

“... இப்பிறப்பிலேயே பதினெண்சித்தர் பீடாதிபதி இட்டும் தொட்டும் சுட்டியும் அருள் வழங்கும் பேரின்ப நிலை அனைவருக்கும் கிடைக்காது. அப்படியே கிடைத்தாலும் ‘கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போவதும்’, ‘உண்பது செறிக்காமல் போவதும்’, ... சாதாரணமாக நிகழ்வனவே. உலகியல் மாயைகளும், மயக்கங்களும், தயக்கங்களும், மாச்சரிய ஐயங்களும், ஆச்சரிய கூச்சங்களும் கருவிலேயே திருவுடையாராக அல்லாதாரைக் கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், கை காலிருந்தும் முடவராய், கருத்திருந்தும் பித்தராய்ச் செயல்படவே செய்திடும். அவரவரின் ஊழும் விதியும் குருவருள் சித்திக்க விடாமல் தடுப்பதை அறிவாலும், அடுத்தடுத்து முயல்வதாலும், குருபத்தியாலும் வெல்லுவது அனைவருக்கும் எளிதாகாது.... .... ....”

**- குருபாரம்பரிய வாசகம்.**

## <u>இயக்கம் பற்றி:-</u>

1) இம்மண்ணுலகில் தோன்றிய அருளாளர்கள் பெரும்பாலும் தனிமரங்களாகவே செயல்பட்டுச் சென்றுள்ளார்கள். அதனுல்தான், அருளுலகச் சர்வாதிகாரங்களும், சுரண்டல்களும், ஏமாற்றுக்களும், பொதுவுடமை விரோதப் போக்குகளும், ... ... அவ்வப்போது தோன்றி மறைகின்றன.

2) யாம், மக்களோடு மக்களாகக் கலந்து பழகி அருளுலக வளர்ச்சிகளுக்கும், மலர்ச்சிகளுக்கும், செழுச்சிகளுக்கும் உழைக்கிறோம்.

3) யாம், எமது வாழ்வைத் **'தெய்வீக சோதனை'** (The Test of Divinity) என்ற முறையிலேயே விழிச்சி நிலையில் நடத்தி வருகிறோம். **"எமது வாழ்க்கை, இம்மண்ணுலகுக்கும் முன்பே அண்ட பேரண்டங்களில் வளமாகச் செழித்துள்ள அருள்துறையின் முறையான, முழுமையான வரலாறு"** என்ற பேருண்மைக்கு விளக்கமே எமது ஒவ்வொரு சொல்லும் செயலும்.

4) யாம், ஒரு மாபெரும் தத்துவத்தின் நேரடி உரிமை வாரிசு என்பதால்; யாமும், எம்மைச் சார்ந்தவர்களும் தத்துவப் பிடிப்பும், பற்றும், விருப்பும், நம்பிக்கையும், நோக்கும், போக்கும், ... உள்ளவர்களாகவே என்றென்றும் இருப்போம். **என்றைக்கும் தத்துவத்தை அடகு வைத்தலோ, விற்றலோ, மாற்றலோ, குறைத்தலோ, திருத்தலோ, ... எங்களிடம் இருக்கவே இருக்காது. நாங்கள், தத்துவ நாயகர்களாக, காவலர்களாக, தொண்டர்களாக எப்போதும் இருப்போம்**. எனவே, எங்களால்தான் பொருளுலக வெறிகள், ஏமாற்றுக்கள், சுரண்டல்கள், ஊழல்கள், அதிகார முறைகேடுகள், சர்வாதிகாரங்கள், ஏகபோக முதலாளித்துவங்கள், ... முதலிய அனைத்தும் அகற்றப்படும், அழித்தொழிக்கப்படும்.

5) **அருளாட்சி விரைவில் தாய்நாட்டிலும், படிப்படியாக உலகெங்கும் அமைப்பதற்காகப் பல நூறுயிரக்கணக்கான அருளாளர்கள் விரைவில் செயலில் இறங்குவார்கள்**. ஆனால், சிறந்த தத்துவமும், செயல்திட்டமும் உடைய இ.ம.இ.யும், அ.வி.தி.யும் எல்லோருடனும் கலந்து செயல்படும். ஏனெனில்,

இதற்குத்தான் மேற்படி இரண்டும் எந்தவிதக் குறுகிய வெறியும் இல்லாதவை. **‘1992இல் அருளாட்சி முயற்சி கணிசமான வெற்றி பெறும்’** என்ற தாத்தாக்கள் ஆத்தாக்கள் வாசக நினைவோடு செயல்படுக.

ஓம் திருச்சிற்றம்பலம்.

அன்பே சிவம்

**அன்பு**
**ஞானத் தந்தை, குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரூர்.**
**28.10.83.**

*<u>மூலநகல் எழுதியவர்:</u>*
சித்தரடியான் வெ.க.முத்து,
அழகுநாச்சியம்மன் சன்னிதானம்,
ஒண்டிக்கருப்பு பீடாதிபதி,
செல்வமாரியம்மன் அமளிகை,
முத்துக்கருப்ப சாமி திருவடி,
அருட்போர்த் தளபதி,
திருச்சி ஓயாமெரி ஆதீனம்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

# இந்துமத மறுமலர்ச்சித் திருவாணை

"நகராக்களின் முழக்கமே இந்துமத எழுச்சி."

"தொழுகை முறையின் வளர்ச்சியே இந்துமதச் செழுச்சி."

"இந்து மதச் செழுச்சியே இந்திய நாட்டின் வளவளர்ச்சி."

"இந்தியரின் வளவளர்ச்சியே இம்மண்ணுலக உயர்ச்சி."

"இந்துமதத்தாலேயே உலக ஒற்றுமையும் அமைதியும் உருவாகும்."

"இந்து மதத்தாலேயே உலகச் சமத்துவமும் சகோதரத் தத்துவமும் உண்டாகும்."

"இந்து மதத்தாலேயே உலகப் பொதுவுடமைக் கூட்டுறவு அரசு அமையும்."

"இந்து மதமே எல்லா எண்ணங்களையும், உணர்வுகளையும் தீர்த்து வைக்கிறது."

"இந்து மதமே இறவாமைக்கும் பிறவாமைக்கும் வழி காட்டுகிறது."

//'இந்துமத மறுமலர்ச்சித் திருவாணை' என்ற தலைப்பில் 1983இல் குருதேவர் எழுதிய கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள்.//

**“அருளுலகில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்”** -- குருபாரம்பரிய வாசகம்.



“... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ வெற்றி பெறுமாறு செய்தார். ... ...”

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**

www.books.gurudevar.org